பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 03 2025 Wednesday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, மொரீசியஸில் இரண்டு நாள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி புறப்பட்டார்.
- நாடுமுழுவதும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- டிஜிட்டல் கைது போன்ற இணைய குற்றங்களை களைவதற்கென ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் 15 இடங்களுக்குள் முதன்முதலாக இந்தியாவைச் சேர்ந்த 5 பேர் இடம்பெற்று வரலாற்றுச்சாதனை படைத்துள்ளனர்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மொரீசியஸில் இரண்டு நாள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி புறப்பட்டார்.

முன்னதாக, அந்நாட்டு பிரதமர் திரு. Naveen Chandra Ramgoolam-வுடன் அவர் பேச்சு நடத்தினார்.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மொரீசியஸின் மேம்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதற்கான 8 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

அந்நாட்டு தேசிய தின கொண்டாட்டத்தின் சிறப்பு விருந்தினராக பிரதமர் பங்கேற்றார்.

மொரீசியஸின் உயரிய விருதும் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

அடல்பிஹாரி வாஜ்பாய் பொதுசேவை மற்றும் புத்தொழில் மையத்தையும் இருநாட்டு பிரதமர்களும் கூட்டாக திறந்து வைத்தனர்.

>>>>>><<<<<<

இதற்கிடையே, மொரீசியஸின் உயரிய விருது பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது, நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமை அளிப்பதாக உள்ளது என்று பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. சுதான்சு திரிவேதி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்விருதினை பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையை பிரதமர் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இதுவரை 21 நாடுகள் உயரிய விருதுகளை பிரதமருக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், உலக நாடுகளுடனான நட்புணர்வு புதிய உச்சத்தை எட்டியிருப்பதாகவும் திரு. சுதான்சு திரிவேதி கூறினார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 2 ஆயிரத்து 516 கோடி ரூபாய் செலவில் இதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

தமிழகத்தில் மட்டும் 4 ஆயிரத்து 532 கூட்டுறவு சங்கங்களில் இப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டு வருவதாக தெரவித்தார்.

அறிவுசார் சொத்துரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நம் நாட்டிலிருந்து வெளியாகும் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இணையதள குற்றங்களை களைவதற்கென ஒருங்கிணைப்பு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த உள்துறை இணையமைச்சர் திரு. Bandi Sanjay Kumar, டிஜிட்டல் கைது போன்ற நடவடிக்கைகளை தடுப்பதற்கென இந்த மையம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதுதொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 83 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாஸ்ட்ஆப் கணக்குகளும், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட Skype கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் 1 லட்சத்து 65 ஆயிரம் அஞ்சலகங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர். Pemmasani Chandrasrkar கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதில் 1 லட்சத்திற்கு மேற்பட்ட அஞ்சலகங்கள் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் 16 ஆயிரம் அஞ்சலகங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

அஞ்சலகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 63 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சலகங்கள் வங்கி சேவைகளை வழங்கி வருவதாக டாக்டர். Pemmasani Chandrasekar கூறினார்.

>>>>>><<<<<<

தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு நிதிக் கழகத்தின் சார்பில் கடந்த மூன்றாண்டுகளில் சலுகையுடன் 2 ஆயிரத்து 347 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதன் மூலம் 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடன்களை குறித்த காலத்திற்கு திருப்பி செலுத்துவோருக்கு வட்டியில் சலுகை வழங்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

மகளிர் பாதுகாப்பிற்காக நிர்பயா நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் 76 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த நிதியத்தின் கீழ் நாடுமுழுவதும் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

இணைய தடயவியல் ஆய்வகங்கள் 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இணைய குற்றங்களை கையாள்வதற்கென 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

கர்நாடகாவில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் காங்கிரஸ் அரசு செயல்படுவதாக பிஜேபி மற்றும் மதச்சார்பற்ற ஜனதா தளம் குற்றம் சாட்டியுள்ளன.

இதுதொடர்பாக, இவ்விரு கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு, ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட்டை சந்தித்து மனு அளித்தது.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில பிஜேபி தலைவர் திரு. விஜயேந்திரா,

காங்கிரஸ் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிப்பதற்கான குழுவின் தலைவர்களாக, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்குப் பதிலாக, காங்கிரஸ் நிர்வாகிகள் நியமிக்கப்படுவதை எதிர்த்து இந்த மனுவை ஆளுநரிடம் வழங்கியதாக தெரிவித்தார்.

கட்சி நிர்வாகிகளை குழுவின் தலைவர்களாக நியமிப்பதும், அவர்களுக்கு கௌரவ ஊதியம் வழங்குவதும் சட்டவிரோதமானது என்று திரு. விஜயேந்திரா குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்து காவல்துறை உயரதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

ராஞ்சியில் நடைபெற்ற இந்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில், எதிர்வரும் பண்டிகை காலங்களில் அமைதியை முழுமையாக பராமரிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

பதற்றமளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. ஹேமந்த் சோரன் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் 15 இடங்களுக்குள் முதன்முதலாக இந்தியாவைச் சேர்ந்த 5 பேர் இடம்பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இந்த பட்டியலின் 3வது இடத்தில் குகேஷும், 5-வது இடத்தில் அர்ஜுன் எரிகேஸியும், 8வது இடத்தில் பிரக்ஞானந்தாவும்,14வது இடத்தில் அரவிந்த் சிதம்பரமும், 15வது இடத்தில் விஸ்வநாதன் ஆனந்தும் இடம்பெற்றுள்ளனர்.

>>>>>><<<<<<

உலக பாரா கிராண்ட் ப்ரீ தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் 100 மீட்டர் ஓட்டத்தில் Mit Bharatbha Patelலும், ஆடவர் உயரம் தாண்டுதலில் ராம்பாலும், மகளிர் 100 மீட்டர் ஓட்டத்தில் Kiren Shriram Metkar –ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் மற்றும் மகளிர் ஓட்டப் பிரிவுகளில் Preeti Pal, Pranav Prashant Desai, Ababil Ali, அபிஷேக் ஜாதவ் மற்றும் விஷ்ணு வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் உயரம் தாண்டுதலில் Chandresh வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 100 மீட்டர் ஓட்டப் பிரிவுகளில் வினெய் மற்றும் பிரகதீஸ்வர ராஜா வெண்கலப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 100 மீட்டர் ஓட்டத்தில் Jayanti Behara-வும், ஆடவர் வட்டு எறிதலில் Haney -யும் உயரம் தாண்டுதலில் Banti –யும் Hareshkumar Tadhani –யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<<

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹன் கபூர் - Ruthvika Shivani இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-10, 17-21, 24-22 என்ற செட்கணக்கில் தைவானின் Hong Wei Ye - Nicole Gonzalez இணையை வென்றது.

>>>>>><<<<<<

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் சுப்மன் கில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>>>>END<<<<<<